முருகப்பெருமான் துணை

**மகான் ஔவையார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.10.2022**, செவ்வாய்கிழமை

1. பரபிரம்ம சூட்சுமம் கண்ட
   பரமானந்த ஞான குருவே
   வரம்பல ஆறுமுகனாரிடம் பெற்று
   வள்ளலாய் வாழும் குருவே
2. குருவே ஆறுமுக அரங்கமகானே
   குவலயத்தில் உன் பெருமை கூறி
   அருளுவேன் அனுகூல ஆசிதனை
   அப்பனே சுபகிருது தரிவை திங்கள்
3. திங்களிலே மூவையீர் திகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 17 ம் நாள், 04.10.2022 செவ்வாய்கிழமை)
   தெரிவிப்பேன் ஔவையார் யானும்
   ஓங்கார ஞான உலகம் அமைய
   ஓங்காரன் அனுகூலம் அடைய வேண்டும்
4. வேண்டி அரங்கன் திருவடி பற்றி
   விடாது ஞானியர்கள் வழிதனை
   தொண்டுடன் கடைபிடித்து வர
   தெய்வ நெறியாக எங்கும் பரவி
5. பரவியே அரங்கனின் குருவருள்
   பழுதில்லா திருவருளை காட்டும்
   அறம் வழி உலகை மீட்டிட
   அரங்கன் எடுத்த அவதாரம்
6. அவதாரம் வெற்றி காண்கும்
   அகிலத்தார் அரங்கமகானின்
   அவதாரம் மகிமை அறிந்து வர
   அனுகி தீட்சை அனுகூலம் பெற
7. பெறவே ஞானவான்கள் எனும்
   பிசகில்லா மாற்றம் கண்டு
   தரணியே ஞானப்படைகள் தானும்
   தவராஜன் ஆசிபடப் பெருகி
8. பெருகியே ஓங்கார பலம் கொண்ட
   பிரபஞ்சமாக உலகம் மாறும்
   ஆறுமுகப் பெருமானை வணங்கும்
   அற்புதம் எங்கும் மிகுதியாகி
9. ஆகியே அகிலம் மகிழ்வு பெறும்
   அமைதி பாதுகாப்பு அனைத்தும்
   அகிலமே கண்டு நிலை உயரும்
   அறிவிப்பேன் தரும பலமும் பெருகி

10. பெருகியே உலகினில் பசிபிணி
    பேரிடர் பிற துன்பம் ஏதுமில்லா
    தரும பலமும் ஞானவான் ஆட்சியும்
    தரணியே கண்டு உலகமாற்றமாக

11. ஆகவே அற்புதம் தானுமே
    அரங்கன் அவதாரத்தால் நிகழும்
    வகைபட ஞானிகள் ஆட்சியாக
    வையகம் அரங்கனால் காணும்
    அனுகூல ஆசி முற்றே

–சுபம்–